4. அறிவிப்புகள்

(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு (செனட்) இச்சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களிலிருந்து மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. தேர்ந்தெடுக்கப்படுவோரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும். இருப்பினும் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பேரவை உறுப்பினர் காலம் முடிவடையும் நாளோடு இப்பதவிக் காலமும் முடிவடையும். வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 20-2-1996 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 22-2-1996 வியாழக்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 23-2-1996 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் தேர்தல் நடைபெறும்.. தேதி பற்றிய அறிவிப்பு வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(இ) இலவச வேட்டி சேலைகள் வழங்கியதில் ஏற்பட்ட சில குறைபாடுகள் குறித்து

முற்பகல் 11·30

*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு அறிவிப்பு கொடுத்திருந்தேன். அதற்குப் பதில் சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே அதைக் கேட்பதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.